"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

Tamil Education Service Switzerland

# பொதுத்தேர்வு 2020

## தமிழ்மொழி ஆண்டு 12

**நேரம்: 150 நிமிடம்**

**சுட்டெண்:** ____________________

# பகுதி - 1

## 1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.

1 2 3

1. முத்தமிழ்க்காப்பியமாகப் போற்றப்பெறுவது
   1. மகாபாரதம்
   2. இராமாயணம்
   3. சிலப்பதிகாரம்

2. உயிர்த்தொடர்க்குற்றியலுகரம் பெற்று வந்துள்ள சொல்
   1. ஆறு
   2. வரகு
   3. பஞ்சு

3. வேலை, தொழில், பாம்பு என்னும் பல பொருள்களைக் குறிக்கும் ஒருசொல்
   1. நறவு
   2. பாணி
   3. பணி

4. ‘ஆவியோ நிலையில் கலங்கியது யாக்கை…’ இதில் யாக்கை என்பது
   1. யாசகம்
   2. உடம்பு
   3. உயிர்

5. ஆட்டுக்கு கடா போல மானுக்கு
   1. மறி
   2. பிணை
   3. கலை

6. நன்கு படித்த மாணவன் தேர்வில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றான். இதில் படித்த என்பது
   1. வினையெச்சம்
   2. பெயரெச்சம்
   3. முற்றெச்சம்

7. ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றின் முன்னோடியாக விளங்கிய பூதந்தேவனார் வாழ்ந்த காலம்
   1. கிறிஸ்து பிறப்பதற்கு முற்பட்ட காலம்
   2. கிறிஸ்து பிறப்பதற்கு பிற்பட்ட காலம்
   3. சங்கமருவியகாலம்

8. எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களையும் கொண்ட இலக்கணநூல்
   1. நம்பி அகப்பொருள்
   2. நன்னூல்
   3. தொல்காப்பியம்

9. தூங்கலோசையைக் கொண்ட பா இனம்
   1. கலிப்பா
   2. வஞ்சிப்பா
   3. அகவற்பா

10. மறங்கிடந்ததிண்டோள் என்பதன் பிரிப்பு வடிவம்
    1. மறங் + கிடந்த + திண் + தோள்
    2. மறங் + கிடந்த + திள் + தோள்
    3. மறம் + கிடந்த + திண்மை + தோள்

1 2 3

11. அன்பெனப்படுவது தன்கிளை செறா அமை. இதில் கிளை என்பது
    1. மரக்கிளை
    2. சுற்றம்
    3. கிள்ளை
12. உடம்படுமெய் தோன்றப் புணர்ந்த சொல்
    1. கண்ணீர்
    2. சேவடி
    3 தீந்தமிழ்
13. என் தம்பி சப்பாத்துகளை ஒழுங்காக அடுக்கி வைத்தான். இதில் சப்பாத்து என்பது
    1. போத்துக்கேயச்சொல்
    2. ஆங்கிலச்சொல்
    3. ஒல்லாந்துச்சொல்
14. எதையும் ஆராயாது வெட்டிப்பேச்சில் ஈடுபடுதல் சான்றோர் பண்பாகாது. இதில் வெட்டிப்பேச்சு
    1. கோபித்துப் பேசுதல்
    2. வீணாகப் பேசுதல்
    3. உரத்துப் பேசுதல்
15. ஈழத்தில் நவீன கவிதையை எழுதுவதற்கு வித்திட்டவர்
    1. பாவலர் துரையப்பாபிள்ளை
    2. சோமசுந்தரப்புலவர்
    3. புலவர் அரசகேசரி
16. நாம் நெடுஞ்சாலையில் செல்லும்போது வேகக் கட்டுப்பாட்டைப் பின்பற்ற வேண்டும். இதில் நெடுஞ்சாலை என்பது
    1. இருபெயரொட்டுப்பண்புத்தொகை
    2. வடிவப்பண்புத்தொகை
    3. அளவுப்பண்புத்தொகை
17. பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது. இதில் விழுந்தவன்
    1. வினையெச்சம்
    2. தொழிற்பெயர்
    3. வினையாலணையும்பெயர்
18. பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொற்களும் இடம்பெற்றுள்ள தொடர்
    1. விளையும் பயிரை முளையிலே தெரியும்
    2. தருமம் தலை காக்கும்
    3. கடிமலர் மீது இருந்தது அளி
19. பரன் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் சிற்றுந்துக்கு முப்பது லீற்றர் நிரப்பினான். இதில் வந்துள்ள ஆகுபெயர்
    1. எடுத்தலளவையாகுபெயர்
    2. முகத்தலளவையாகுபெயர்
    3. நீட்டலளவையாகுபெயர்
20. ‘மீனொடு நெற்குவைஇ மிசையம்பியின் மனை மறுகுந்து…’ இவ் அடியில் அளபெடை பெற்று வந்துள்ள சொல்
    1. மிசையம்பியின்
    2. நெற்குவைஇ
    3. மறுகுந்து

1 2 3

21. பகுபத உறுப்புகள் ஆறும் பெற்று வந்துள்ள சொல்
   1. பிடித்தனன்
   2. நடந்தனன்
   3. செய்தனன்

22. தமிழால் வைதாரையும் வாழவைப்பான் இறைவன். வைதல் என்பதன் எதிர்ப்பொருட்சொல்
   1. விதித்தல்
   2. வாழ்த்துதல்
   3. தூற்றுதல்

23. புதியகாலத்துத் தலைமைக் கவிஞனாக விளங்கியவர்
   1. பாரதிதாசன்
   2. நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை
   3. பாரதியார்

24. ‘அணங்கு கொல் ஆய்மயில் கொல்லோ…’ இவ்வடியில் கொல் எனும் சொல் குறிக்கும் பொருள்
   1. ஐயம்
   2. வினா
   3. அசை

25. மிகத்திறமை மிக்கவர்களுடன் கூடிப் பழகுபவர்களிடமும் அவரது திறமையின் பிரதிபலிப்புக் காணப்படும். இக்கருத்தமைந்த பழமொழி
   1. ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி நஞ்சு
   2. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையமுடியும்
   3. கம்பன் வீட்டு கட்டுத்தறியும் கவிபாடும்

(25×1=25 புள்ளிகள்)

## 2. சிறுகுறிப்பு எழுதுக.

1. பிள்ளைத்தமிழ்

2. தண்டியலங்காரம்

3. நாவல் இலக்கியம்

(3×2=6 புள்ளிகள்)

**3. ஒருவர் தன் வாழ்க்கையில் வாய்மையைப் பேணுவாராயின் அவர் பெறும் சிறப்புகளைத் திருக்குறள்களின் துணைகொண்டு தருக.**

(3 புள்ளிகள்)

**4. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் சோழர் ஆட்சியில் தோற்றம் பெற்ற காவியங்கள் எவை? (1 புள்ளி)

2. தன்வினை, பிறவினை என்பவற்றை எடுத்துக்காட்டுடன் விளக்குக. (2 புள்ளிகள்)

3. பத்துப்பாட்டு நூல்களுள் அடங்கும் ஆற்றுப்படை நூல்களைத் தருக. (2 புள்ளிகள்)

4. வேற்றுமைத்தொகை என்றால் என்ன? இரண்டாம், நான்காம் வேற்றுமைத்தொகைக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக. (2 புள்ளிகள்)

5. உயிரெழுத்துகளிலும் மெய்யெழுத்துகளிலும் இனமாகும் எழுத்துகள் எவை? (1 புள்ளி)

6. 1948 இல் ஈழத்தில் குடியுரிமைச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் யார்? (1 புள்ளி)

7. தொல்காப்பியர் கூறும் எட்டு மெய்ப்பாடுகளும் எவை? (1 புள்ளி)

8. 'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்'
இக்குறளின் மூலம் வள்ளுவர் எதனைத் தெளிவுபடுத்துகிறார்? (1 புள்ளி)

**5. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

தலையின் மேற் சுமந்த கையள் தழலின் மேல் நிற்கின்றாள் போல்
நிலையின் மேல் மிதிக்கும் தாளள் நேசத்தால் நிறைந்த நெஞ்சள்
கொலையின் மேல் குறித்த வேடன் கூர்ங்கணை உயிரைக் கொல்ல
மலையின் மேல் மயில் வீழ்ந்தன்ன மைந்தன் மேல் மறுகி வீழ்ந்தாள்.

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? பாடியவர் யார்? (1 புள்ளி)

2. இப்பாடலில் மேலோங்கிக் காணப்படும் உணர்வு யாது? (1 புள்ளி)

3. இதில் வந்துள்ள உவமைத்தொடர்களைத் தருக. (1 புள்ளி)

4. இப்பாடலிலிருந்து பின்வருவனவற்றைத் தருக.

அ. பெயரெச்சம் __________

ஆ. சினைப்பெயர் __________

இ. மோனை __________

ஈ. எதுகை __________ (1 புள்ளி)

5. இப்பாடலின் பொருளை உமது உரைநடையில் எழுதுக.

(2 புள்ளிகள்)

**6. அ. 'பள்ளிப்பருவம்' எனும் தலைப்பில் எட்டுவரிகளுக்குக் குறையாமல் கவிதை**

**அல்லது**

**ஆ. 'மனித உயிர்களைக் காவுகொள்ளும் வைரஸால் உருவாகும் நோய்களை ஒழிப்போம்' என்ற தலைப்பில் ஒரு துண்டுப்பிரசுரம் எழுதுக.**

(4 புள்ளிகள்)

**7. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றினைப்பற்றி 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. தமிழ்மொழி வரலாறு
2. பண்டைக்கால மக்களின் வாழ்வியலில் அகத்திணை, புறத்திணை
3. பேரிடர் காலங்களில் மக்கள் எதிர்நோக்கும் இன்னல்களும் அதனைத் தீர்க்கும் வழிகளும

(9 புள்ளிகள்)

## பகுதி – 2

**1. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

எளிய உணவு, தூய்மையான உடை, காற்றோட்டமும் வெளிச்சமும் உள்ள சிறிய வீடு, சிக்கனமான செலவு, நேர்மையான உள்ளம் இயற்கையான பழக்கவழக்கங்கள் கொண்டது நல்வாழ்வு எனப்படும். பிறரைப்போல நடித்து வாழ்வது நல் வாழ்வாகாது. கண்மூடித்தனமாக எவரையும் பின்பற்றி நடப்பது கண்ணியமான வாழ்வாகாது. கட்டளைக்குக் கட்டுப்பட்டு அடங்கி ஆமை போலப் பதுங்கி வாழ்வது பொருள் நிறைந்த வாழ்வாகாது. ஓடம் தண்ணீரில் மிதக்கலாம். தண்ணீர் ஓடத்தில் ஏறக்கூடாது. ஓடம் அமுங்கிவிடும். இது நம் வாழ்வில் தவறுகள் ஏற்பட இடமளிக்கக்கூடாது என்பதை உணர்த்துகிறது. ஒவ்வொரு நாளிலும் பெறும் அனுபவங்களைத் திரட்டி அவற்றை ஆராய்ந்து அறிந்து உணர்ந்து நேர்மையாக வாழ்வதுதான் நிறைவான வாழ்வு. நடிப்புச் சுதேசியாக வாழ்வது மனக்கதவைச் சாத்திவிட்டு ஊமைபோல் வாழ்வதாகும். வறுமையிலும் கடமை தவறாத பாரதியின் பண்பு, நஞ்சைக் கொடுத்த போதும் கொள்கை தவறாத சோக்கிரட்டீசின் உறுதி, புத்தரின் அன்பு, காந்தியின் உழைப்பு, யேசுவின் தியாகம் என்பன நம் கண்முன் நின்று நிலவவேண்டும்.

1. இப்பந்தியில் கூறப்பெற்றுள்ள தலைமைக்கருத்து யாது?

2. தண்ணீரில் மிதக்கும் ஓடம் மனிதவாழ்வில் எதனை விளக்குகிறது?

3. ஆசிரியர் உயர்ந்தோர் பண்புகளை எடுத்துக்காட்டியதன் நோக்கம் யாது?

4. ‘கண்மூடித்தனமாக வாழலாம்’ என்பது இவ் உரைப்பகுதிக்குப் பொருத்தமானதா?

5. ‘நிறைவான வாழ்வு’ என்பது எது?

6. கண்ணியமாக வாழவேண்டுமெனில் நாம் எப்படி வாழவேண்டும்?

(6X1=6 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் உரைப்பகுதிகளுள் உமக்குத்தெரிந்த மொழியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் தமிழாக்கத்தை எழுதுக.**

**Deutsch:**

Über mehrere Jahrhunderte wurde von Gelehrten, Philosophen, königlichen Familien und Adeligen das populäre Indoor-Spiel namens Schach gespielt. Es stammte aus Indien und wurde sechshundert Jahren nach Christus vom bekannten Spiel «Chadurangam» abgeleitet. In Indien sagt man "Chadurangam" auch für die Elefantenherde, Kavallerie (Pferdeherde), Artillerie (militärisches Kampfvolk) und Infanterie (historisches Fussvolk). Chadurangam wurde von Indien nach China, Korea und Japan verstreut. Nachdem die Muslimen in Persien auch gespielt haben, breitete es sich dort aus. Auf arabisch heisst es "Shuturanij". Als die Muslimen Spanien eroberten, wurde es im Westen Europas eingeführt und im zehnten Jahrhundert in ganz Europa verteilt.

**French:**

Les échecs sont un jeu de société joué depuis de nombreux siècles par des populations de classes sociales élevées telles que les savants, les philosophes ou les familles royales. Le jeu d’échecs provient du jeu de "sathurangam" qui a été joué à partir du 6ème siècle après JC. en Inde. Le mot «sathurangam» fait référence aux quatre troupes alors présentes en Inde, à savoir la troupe d'éléphants, de cavalerie, des piétons et d'infanterie. La pratique du jeu "Sathurangam" s'est étendue de l'Inde à la Chine et de là, aux pays telles que la Corée et le Japon. Après la conquête musulmane de la Perse, le jeu s'est également répandu dans les pays arabes où il a été nommé en arabe "Shatranj". Avec la conquête de l'Espagne par les musulmans, le jeu s'est également étendu à l'Europe occidentale. A partir du Xe siècle, le jeu se répandit dans toute l'Europe.

**Italy :**

Gli scacchi sono un gioco da tavola praticato per molti secoli da popolazioni di ceti sociali alti come studiosi, filosofi o famiglie reali. Scacchi ebbe origine dal gioco “sathurangam” che venne giocato dal VI secolo d.C. in India.  La parola "sathurangam" si riferisce alle quattro truppe allora presenti in India, ovvero la truppa di elefanti, cavalleria, pedine e fanteria. La pratica del gioco “Sathurangam” si diffuse dall'India alla Cina e da lì alla Corea e giappone.  Dopo la conquista musulmana della Persia il gioco si diffuse anche nei paesi arabi dove venne nominato in arabo come "Shatranj". Con la conquista della spagna da parte dei musulmani il gioco si diffuse anche nell’ Europa occidentale. A partire dal decimo secolo il gioco di diffuse in tutta Europa.

(4 புள்ளிகள்)

**3. கீழ்க்காணும் பந்தியை மூன்றிலொரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

இயற்றமிழை வளர்த்து, வாழச்செய்த அக்காலச் செந்நாப் புலவர்களைச் 'சொல்லேர் உழவர்' என்று இலக்கியங்கள் சிறப்பித்துள்ளன. 'இளவேனிற் காலத்தில் சான்றோர் நாவிற் பிறந்த கவிதைகளின் புதுமையை மக்கள் கொண்டாடுவர். புலவர்கள் தம் செவிகளை வயலாகவும் தமக்கு முற்பட்ட சான்றோர் கூறிய செய்யுள்களைத் தம் சொல்லை வளர்க்கும் நீராகவும் கொண்டு தமது அறிவுடைய நாவாகிய கலப்பையால் உழுது உண்டனர். இத்தகு புலவர் பெருமக்கள் கவிகளைப் பாண்டிய அரசன் கேட்டு மகிழ்வான்' என்ற செய்தி கலித்தொகையின் நெய்தற்கலி 35 ஆவது பாடலில் குறிப்பிடப்பெற்றுள்ளது. விவசாயி ஏரினைக் கொண்டு நிலத்தினை உழுது நல்ல பயிரினை விளைவிப்பதைப் போலப் புலவர்கள் சொற்கள் என்ற ஏரினைக் கொண்டு தமிழ்மொழியினை உழுது நல்ல செய்யுள்களைப் புனைந்துள்ளனர். ஆதலால், அப் புலவர்களைச் 'சொல்லேர் உழவர்' என்று 'தமிழ் விடுதூது' என்ற சிற்றிலக்கியம் குறிப்பிட்டுள்ளது. இப்புலவர்கள் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்ற நான்கு வகையான பாக்களைக் கொண்டு இயற்றமிழ் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றியுள்ளனர்.

(4 புள்ளிகள்)

**இறுதிப்புள்ளிகள்**

| **பணியகப் பயன்பாட்டிற்கு:** | | | |
|---|---|---|---|
| **விடைத்தாள் மதிப்பீடு** | **முழுப்பெயர்** | **கையொப்பம்** | **மொத்தப்புள்ளி** |
| **முதலாம் முறை** | | | |
| **இரண்டாம் முறை** | | | |
| **இறுதிப்புள்ளிகள்** | | | |